உ
பாலு சரவண சர்மா
*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

# ஆடிப்பூரம் என்று கொண்டாட வேண்டும் ?



விக்ருதி வருடத்தில் ஆடி மாதத்தில் பூரம் நட்சத்திரம் இரண்டு நாட்கள் வருகிறது இதில் எந்த நாளில் கொண்டாட வேண்டும் என்பதை இங்கு விளக்கமாக தரப்படுகிறது. புவி சாய்வு கோணம் நீக்கிய நிராயண சூரியன் கடக (90°' - 120°)இராசியில் இருக்கும் காலத்தில் சந்திரன் பூரம்(133°20' முதல் 146°40 வரை) நட்சத்திரத்தின் ஊடாக பயணிக்கும் காலமே ஆடிப்பூரம் ஆகும். இது சூரிய மாத(சௌரமான) அடிப்படையிலான வழிபாடாகும்.

**ஆடிப்பூரம் நட்சத்திரத்தின் இருப்பு**

*திருக்கணிதப்படி:*

ஆடி 26 (11.8.2010) புதன் கிழமை அன்று மாலை 4 மணி முதல் மறுநாள் ஆடி 27 (12.8.2010) வியாழன் கிழமை அன்று மதியம் 1:10 மணி வரை உள்ளது

*வாக்கிய பஞ்சாங்கப்படி:*

ஆடி 26 (11.8.2010) புதன் கிழமை அன்று இரவு 7:15 மணி முதல் மறுநாள் ஆடி 27 (12.8.2010) வியாழன் கிழமை அன்று மாலை 5:40 மணி வரை உள்ளது

**பூரம் நட்சத்திரம் Purva Phalguni (पूर्व फाल्गुनी) வானில் உள்ள தகவல்**

பூரம் என்பது சிம்ம இராசிக்கூட்டத்தில் உள்ள இரண்டு (No. 422 : Zosma, *Purva Phalguni-1* δ Leonis .No. 423 : *Purva Phalguni-2* θ Leonis.*)* நட்சத்திரங்களை குறிப்பதாகும்.

நிராயண முறையில் சிம்ம இராசி பகுதி(120° – 150°) இடைவெளியில் 133°20' பாகைக்கும் - 146°40 பாகைக்கும் இடைப்பட்ட பகுதியாகும் . ஆடிமாத சூரியனுக்கு அருகில் பூரம் நட்சத்திரம் இருப்பதால் இது பகலிலும், இரவிலும் தெரியாது. இந்த நட்சத்திரம் பங்குனி மாதத்தில் பௌர்ணமி சந்திரன் அருகில் மிக தெளிவாக தெரியும்.

இந்து ஜோதிட அகராதிப்படி இதன் அதிபதி சுக்கிரன் . சுக்கிரனின் அதிபதி மகாலட்சுமி எனவே பூரம் அன்று செய்யப்டும் சுமங்கலி பூஜை மிகவும் உயர்ந்ததாகும்



வானில் பூரம் 1

**கோவில்களில் ஆடிப்பூரம்**

சைவ திருக்கோவில்களில் அம்பாள் அடிப்பூரமும், வைணவ திருக்கோவில்களில் ஆண்டாள் ஆடிப்பூரமும் வாக்கியப்படி நடத்தப்படுவதால் ஆடிப்பூரம் காலையில் உதயத்தில் இருந்து உச்சிகாலம் வரை உள்ள ஆடி 27 (12.8.2010) வியாழன் கிழமை அன்றுதான் கொண்டாடப்படும்.

**சுமங்கலி பூஜை**

சுமங்கலி வழிபாடு என்பது மாலையில் விளக்கு ஏற்றி கொண்டாடுவதாகும். அந்த நேரத்தில் பூரம் நட்சத்திரம் விண்ணில் இருக்க வேண்டும் என்பது விதி அந்த அடிப்படையில் கணக்கிட்டால் ஆடி 26 (11.8.2010) புதன் கிழமை அன்று மாலை 7 மணிக்கு மேல் தீபம் ஏற்றி சுமங்கலி பூஜை செய்வதே நல்லது

கோவில்களில் கொண்டாடப்படும் (12.8.2010 வியாழன் அன்றே மாலை 5 மணிக்கு முன்னர் சுமங்கலி பூஜை செய்தல் நன்று.

**அடுத்து வரும் வருடங்களில் ஆடிப்பூரம் வரும் தேதிகள்**

| | |
|---|---|
| 2.8.2011 செவ்வாய் | 22.7.2012 ஞாயிறு & 23.7.2012 திங்கள் |
| 9.8.2013 வெள்ளி | 30.7.2014 புதன் |

20.7.2015 திங்கள் மற்றும் 16.8.2015 ஞாயிறு (இந்த வருடத்தில் 2 ஆடிப்பூரம் வரும். இரண்டாவதாக வரும் ஆடிப்பூரமே சரியானது)

**குறிப்பு:** இந்து வானசாஸ்திரத்தில் நட்சத்திரம் என்பது 13°20' கோண இடைவெளியை குறிப்பிடுவதாகும் அன்றி வானில் மின்னும் ஒரு நட்சத்திரத்தை மட்டும் குறிப்பிடுவதல்ல. மேலும் வாணகணிதவியலில் நமது முன்னோர்கள் துல்லியமாக இருந்தார்கள் என்பதை நினைவில் கொள்ளவும்.





12h
11h
10h
9h
URSA
MAJOR
LEO MINOR
+30°
+20°
+10°
0°
−10°
−20°
μ
κ
ζ
Adhafera
ε
λ
δ
γ
Algieba
LEO
β
η
θ
Denebola
M65
M66
M105
M96
ψ
ν
α
Regulus
ξ
ι
ο
ρ
ω
π
χ
ECLIPTIC
σ
τ
SEXTANS
υ
VIRGO
φ
CRATER
HYDRA
1
2
3
4
5
6